15.04. 2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

SC. No. 375/2021

அ.சா.15

பெயர். திரு.ஆறுமுகம்

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை .</u>

இரண்டு மணி முதல் 5:00 மணி வரை நதியாவும் அவரது கணவரும் எங்கிருந்தார்கள் என்று தெரிய வந்ததா என்றால் சம்பவ இடத்திலேயே இருந்ததாக எனது விசாரணையில் தெரியவந்தது. அது போன்று எனது இறுதி அறிக்கையிலோ சாட்சிகளின் வாக்குமூலத்திலோ தனியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 26-04-2021 காலை 6:00 மணிக்கு தயார் செய்ததாக சொல்லப்படும் பார்வை மகசரில் இரண்டாவது பக்கம் மூன்றாவது வரியில் சிறிய கட்டிலின் கட்டை ரத்தக்கறை படிந்த நிலையில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்தக் கட்டையை தனியாக மகசரில் கைப்பற்றினேனா என்றால் 7-45 மணிக்கு கைப்பற்றினேன். அந்த மகசரில் 6 வது காலத்தில் மரக்கட்டை என்றுதான் குறிப்பிட்டுள்ளேனே தவிர கட்டிலின் கட்டை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு கைப்பற்றியதாக சொல்லப்படும் கட்டை வழக்கில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் படுத்தப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும் நான் சொல்வது போல கட்டிலின் கட்டை என்று குறிப்பிடப்பட்டு 7-45 மணிக்கு எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் தவறு. பார்வை மகசரில் நான் கையெழுத்து செய்த இடத்தில் எந்த தேதி என்று குறிப்பிடவில்லை என்றால் தவறு. போட்டுள்ளேன். அந்தக் கட்டிலின் கட்டையில் எந்த இடத்தில் ரத்த கறை படிந்துள்ளது என்பதை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த வரைபடத்தில் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 வரையிலானவர்கள் வீடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதுபோன்று எதுவும் குறிப்பிடப்படவில்லை. அந்த வரைபடத்தில் சிமெண்ட் காரைகள் உடைத்து

எடுக்கப்பட்டதற்கான தடயங்கள் எதையும் நான் காண்பிக்கவில்லை என்றால், பார்வை மகசர் கைப்பற்றுதல் மகசருக்கு முன்பு தயார் செய்யப்பட்டது என்பதால் அதில் அந்த விவரங்கள் குறிப்பிடவில்லை. அந்த வரைபடத்தில் நான் எந்த தேதியில் தயார் செய்தேன் என்பதற்கு எனது கையெழுத்திற்கு கீழே தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த தோராய வரைபடத்தில் கன்னியம்மன் கோயில் அருகில் உள்ள ஆலமரத்திற்கு பக்கம் தான் சம்பவ இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வரைபடத்தில் மாரியம்மன் கோயில் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால், கோயில் காட்டப்படவில்லை. அந்த வரைபடத்திலும் நான் எந்த தேதியில் அதை தயார் செய்தேன் என்பதற்கு எனது கையெழுத்திற்கு கீழே தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். திருக்கனூர் ஏரிக்கரையில் மாரியம்மன் கோயிலை எனக்கு அடையாளம் காட்டியது யார் என்றால், அந்த ஊரை சேர்ந்த நபர்கள் அடையாளம் காட்டினார்கள். அவர்களது பெயரை நான் குறிப்பிடவில்லை. சம்பவம் நடந்த இடம் புதுவை மாநிலம் என்ற நிலையில் அந்த எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தின் நிலைய அதிகாரியையோ அல்லது கர்ணத்தையோ வழக்கில் பட்டியல் சாட்சிகளாக சேர்த்து உள்ளேனா என்றால் இல்லை. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரையிலானவர்கள் வாக்கு மூலத்தில் ஐயப்பனை 1, 2 எதிரிகள் ஆலமரத்தடியில் இருந்து அழைத்து வந்ததாக விவரங்கள் எதுவும் இல்லை என்றால், திருக்கனூர் ஏரிக்கரை என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் ஆலமரத்தடியில் என்று குறிப்பிடவில்லை. முதல் வரைபடத்தில் பிள்ளையார் கோயில் எதிரில் ரத்தக்கறை படிந்ததாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான். மூன்று மகசர்களில் 7. 45 மணிக்கு முதல் மகசரில் ரத்தக்கறை படிந்த சிமெண்ட் காரை சிறிதளவு, சாதாரண சிமெண்ட் காரை சிறிதளவு. 8:40 மணிக்கு வாட்டர் டேங்கில் இருந்து உடைத்து எடுக்கப்பட்டதாக சொல்லப்படும் சிமென்ட் காரைகள் இந்த காரைகளின் அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ரத்தம் படிந்ததாக சொல்லப்படும் காரைகளில் என்ன அளவிற்கு ரத்தம் படிந்துள்ளது என்பதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 8-15 மணிக்கு கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் செங்கலில் எந்த அளவிற்கு ரத்தம் படிந்துள்ளது என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். 7.45 மணிக்கு கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கட்டையிலும் 6 இன்ச்சில் எத்தனை இன்ச் அளவிற்கு ரத்தம் உள்ளது என்பது குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால், சரிதான். 17-30 மணிக்கு கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கட்டிலின் காலில் தலைப்பகுதியில் சேதாரம் ஏதாவது ஆனதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கட்டிலின் காலில் (சா.பொ.2) இரு பக்கமும் சேதங்கள் உள்ளது என்றால் சரிதான். ஒன்றாவது எதிரி இடம் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மாட்டு கொட்டகையில் இருந்து

கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த மாட்டு கொட்டகையில் எந்த இடத்திலிருந்து குறிப்பாக கைப்பற்றப்பட்டுள்ளது என்பது சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இரண்டாவது எதிரி சரவணன் இடம் வீட்டிற்கு பின்புறம் இருந்து ஸ்பேனர் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் குறிப்பாக எந்த இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டது என்பது சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஸ்பேனரில் எந்த இடத்தில் கறை படிந்துள்ளது என்பது குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 6.30 மணிக்கு மூன்றாவது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கான கைப்பற்றுதல் மகசரில், ஏதோ ஒரு வாழைத்தோப்பில் இருந்து கைப்பற்றப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வாழைத்தோப்பு யாருடையது, வாழைத்தோப்பின் எந்த பகுதியில் இருந்து கைப்பற்றப்பட்டது என்பதை குறிப்பிடவில்லை என்றால், சரிதான். அந்த கட்டையிலும் எந்த அளவிற்கு ரத்தக்கறை படிந்துள்ளது என்பது குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான். அந்தக் கட்டையில் கெம்புக்கிளை இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் சொத்துக்களுக்கான 6 படிவம் 95 களில் 26-04-2021 தேதியிலேயே சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்படி கைப்பற்றப்பட்ட பொருட்கள் 42 நாட்கள் காலதாமதமாகத் தான் 08-06-2021 தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரிவு 52 குற்றவியல் விசாரணை முறை சட்டத்தின் படி ஒரு எதிரியை கைது செய்து அவரிடமிருந்து சான்று பொருட்களை கைப்பற்றும்போது அந்த எதிரியை ஆஜர் படுத்தும்போதே அந்த பொருட்களை படிவம் 95 உடன் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். எதிரியை ரிமாண்ட் செய்யும் போது நீதித்துறை நடுவரிடம் படிவம் 95 சமர்ப்பிக்கப்பட்டு அதில் நடுவரின் இனிசியல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இனிசியல் செய்யப்பட்டும் வழக்கு சொத்துக்கள் 08-06-2021 தேதியில் தான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் ஐயப்பனின் உடம்பிலிருந்து ஆடைகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நான் சாட்சிகள் நதியா, கோபாலகிருஷ்ணன் ஆகியோரிடம் இந்த ஆயுதங்களை காட்டி இந்த ஆயுதங்கள் தான் தாக்க பயன்பட்டதா என்பதை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். ஆனால் அதை வாக்குமூலத்தில் பதிவு செய்யவில்லை. நான் மருத்துவர் மதுவர்தனாவை 11-06-2021 தேதியில் விசாரணை செய்தேன். அவரிடம் நான் சான்று பொருட்களை காட்டி விசாரணை செய்தேனா என்றால் இல்லை. முனியம்மாள் வீடு இருப்பது மாரியம்மன் கோயில் வீதி என்றும், நதியா வசிப்பது கங்கையம்மன் கோயில் வீதி என்றும் சொன்னால் சரிதான். இந்த இரண்டு தெருக்களுக்கும் இடையில் எவ்வளவு தூரம் இருந்தது என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். சுமார் 100

மீட்டர் தூரம் இருக்கும். முனியம்மாள் வீடு கட்டும் இடம் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ளது. அது கிழக்கு மேற்காக உள்ளது. கங்கையம்மன் கோயில் வீதி எந்த திசையில் உள்ளது கிழக்கு திசையில் உள்ளது என்ற விவரம் பார்வை மகசரில் குறிப்பிடப்படவில்லை. அதுகுறித்து எனது ஆய்வறிக்கையிலும் இல்லையென்றால் சரிதான். பிள்ளையார் கோயில் தெருவில் நடந்த சம்பவத்தை யார் மூலம் கங்கையம்மன் கோயில் தெருவில் வசித்து வரும் நதியா தெரிந்து கொண்டார் என்ற விவரத்தை எனது புலனாய்வில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் யார் தகவல் அளித்தார்கள் என்பதை நான் சொல்லவில்லை.

சாட்சிகள் நதியா, கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோருடைய முதல் இரண்டு வாக்குமூலங்களில் எத்தனை மணிக்கு 1, 2 எதிரிகளை திருக்கனூர் ஏரிக்கரையில் கண்டுபிடித்து அழைத்து வந்தார்கள் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். குறிப்பிடப்படவில்லை. நதியாவின் மூன்றாவது வாக்குமூலத்தில் காலை 10 மணிக்கும், சாட்சிகள் கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோரின் வாக்குமூலத்தில் காலை 11 மணிக்கும், 1, 2 எதிரிகள் ஐயப்பனை திருக்கனூர் ஏரிக்கரையில் இருந்து அழைத்து வந்ததாக உள்ளது என்றால் சரிதான். இந்த காலநேரத்தை அவர்கள் யார் மூலமாக தெரிந்து கொண்டார்கள் என்றால், அது பற்றி குறிப்பிடவில்லை. பட்டியல் சாட்சிகள் நதியா, கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோரின் முதல் வாக்குமூலத்தை 25-04-2021 தேதியில் பதிவிட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வாக்குமூலம் முடியும் இடத்தில் நான் 26-04-2021 தேதியில் கையெழுத்து செய்ததாக உள்ளது என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1,2,3 ஆகியோரின் மூன்றாவது வாக்குமூலத்திலும் சாட்சிகள் இளையராஜா, துரை, ஜெயகணேஷ், ஆகியோருடைய மறு வாக்குமூலத்திலும், எந்த தேதியில் பதிவிட்டுள்ளேன் என்று இல்லை என்றால் சரிதான். சாட்சி ராஜா த/பெ ராஜேஷ், சாட்சி கனகா க/பெ ராஜேந்திரன், ஆகியோர்களுடைய வாக்குமூலங்களில் 25/04/2021 தேதியில் திருக்கனூர் ஆலமரத்துக்கு அடியில் இருந்து 1, 2 எதிரிகள் ஐயப்பனை அழைத்து வந்ததாக வாக்குமூலம் பதிவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாக்குமூலங்களை எந்த தேதியில் பதிவிட்டு உள்ளேன் என்று குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். 2 வது வரைபட சாட்சிகள் செல்வகுமார் மற்றும் கார்த்திகேயன் ஆகியோரின் வாக்குமூலங்களில் அவர்களை உதவி ஆய்வாளர் விசாரணை செய்ததாக தான் பதிவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் எழுத்து பிழையாக இருக்கும். வழக்கு கோப்புகளை நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்கு முன்பு அவற்றை பரிசீலனை செய்ததால் அனுப்பினேன். அந்த இரண்டு வாக்குமூலங்களிலும் நான் எந்த தேதியில் கையெழுத்து செய்தேன் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். சாட்சிகள் ராஜா த/பெ ரமேஷ்,

ராஜ்குமார் த/பெ கார்த்திபன், அவர்களுடைய வாக்கு மூலத்தில் 7.45 மணிக்கும், 8.15 மணிக்கும், 8.45 மணிக்கும் தடயங்கள் சேகரிக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதே தவிர, எந்தெந்த இடங்களில் இருந்து தடயங்கள் சேகரிக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சாட்சி ராஜா த/பெ ரமேஷ் அவரது வாக்குமூலத்தில் ஒன்று இரண்டு எதிரிகள் திருக்கனூர் ஏரிக்கரையில் ஆலமரத்தடியில் இருந்து ஐயப்பனை அடித்து இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்ததாகவும், மற்றும்அவ்வாறு அழைத்து வந்தவர்களை சாட்சி ராஜா த/பெ ரமேஷ் அவரது இருசக்கர வாகனத்தில் பின் தொடர்ந்து வந்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 மற்றும் 13, 14 ஆகிய அனைவரும் இறந்து போன ஐயப்பனுக்கு ரத்த சம்பந்தமான உறவினர்கள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் பெரியசாமி த/பெ சக்கரபாணி, பச்சையப்பன் த/பெ தியாகராஜன், ராஜா த/பெ ராஜேஷ், ஆகியோர் சிவபெருமான் பாளையத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ராஜா த/பெ ராஜேஷ் சாட்சிகள் பட்டியலில் இடம்பெறவில்லை என்றால், சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் காலம் 9ல் ஒன்று, இரண்டு எதிரிகள் 12 மணிக்கே திருக்கனூரில் கண்டுபிடித்ததாக உள்ளது என்றால் சரிதான். எந்த இடத்தில் கண்டுபிடித்ததாக தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதில் 26-04-2021 தேதியில் அதிகாலை 5 மணியளவில் ஐயப்பன் இறந்து விட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். காலம் 11-ல் எதிரிகள் ஐயத்துக்குரியவர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன். என்ன காரணத்திற்காக அவர்கள் மீது சந்தேகம் வந்தது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். குருதியியல் அறிக்கையில், அயிட்டம் 7, 9 மற்றும் 11 ஆகியவைகளில் மனித ரத்தம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்த ஐயப்பனின் ரத்த வகையையும் மேற்கண்ட குருதியியல் அறிக்கையில் உள்ள பொருட்களின் ரத்த வகையையும் ஒன்றாக ஒப்பிட்டு அறிக்கை பெறவில்லை என்றால், ரத்த வகை என்ன என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் மருத்துவரால் பிரேத பரிசோதனையின் போது சேகரம் செய்யப்பட்ட ரத்தமும், கிடைக்கப்பெற்ற தடயங்களின் ரத்தமும், ஒன்று என்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மருத்துவரின் அறிக்கையில் அவ்வாறு வருகிறதா என்றால், மருத்துவர் தனது வாக்குமூலத்தில் 11-வது வரியில் இரு ரத்த வகைகளும் ஒன்று என்று குறிப்பிட்டுள்ளார். அதுபோன்று ஒரு முழுமையான ரத்த அறிக்கை நீதிமன்றத்திற்கு பெறப்படவில்லை என்றும், குறியீடு செய்யப்படவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. குருதியியல் அறிக்கையில் உள்ளது. எனக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உள்ளது. நீதிமன்றத்தில் அளித்த அறிக்கையில் இல்லை. எனக்கு அளிக்கப்பட்ட அறிக்கை நகலில் பக்கம் 2 ல் VPM/BIOL/198-2021 என குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரிகளிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களில் எதிரிகளின்

கைரேகை பதிந்துள்ளதா என்பதை கண்டறிய தடைய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பினேனா? என்றால் இல்லை. உரிய தடயங்கள் கிடைக்காத வழக்குகளில் நாங்கள் தடயங்களை தயார் செய்வதற்காக சான்று பொருட்களில் பிரேத பரிசோதனையின்போது சேகரம் செய்யப்பட்ட குருதியை தடவுவது வழக்கம் என்றால் சரியல்ல. நாங்கள் அது போன்று தயார் செய்ததால் தான் சான்று பொருட்களை கைப்பற்றிய போது தயார் செய்த மகசர்களில் மற்றும் படிவம் 95 களில் குருதி படிந்துள்ள அளவு என்ன என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 நதியா இரண்டாவது எதிரியின் மனைவி விஜயகுமாரிக்கும் இறந்து போன ஐயப்பனுக்கும் சண்டை நடந்ததாகவும் அந்த விஷயத்தை ஜெயகணேசுக்கு அ.சா.1 நதியா சொன்னது போல அவரது வாக்குமூலத்தில் இல்லை என்று சொன்னால், சரிதான். 22-04-2021 தேதியில் காலை 6 அல்லது 7 மணிக்கு சென்ற ஐயப்பன் வீடு திரும்பவில்லை என்றும் அதனால் 23-04-2021 தேதியில் காலையிலேயே நதியா அவரது தாய் வீட்டிற்கு போனதாகவும்மறுநாள் 24-04-2021 காலை 9 அல்லது 10 மணிக்கு அவரது அண்ணன் சாட்சி ஜெயகணேஷ் சிவபெருமான் ஆலயத்திற்கு அவரை அழைத்து வந்து விட்டதாகவும் நதியா அவரது வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. 25-04-2021 அன்று பகல் 12 மணிக்கு நதியா சத்தம் கேட்டு பார்க்கும்போது விநாயகர் கோயில் எதிரில் 1 முதல் 4 எதிரிகள் ஐயப்பனை தாக்கியதைப் பார்த்ததாக எனது விசாரணையில் சொல்லி உள்ளாரா என்றால், அவர் ஒன்று முதல் நான்கு எதிரிகள் தாக்கியதாக சொல்லவில்லை ஒன்று, இரண்டு எதிரிகள் தாக்கியதாக தான் சொல்லியுள்ளார். அதேபோல் அந்த இடத்தில் சாட்சிகள் கோபாலகிருஷ்ணன் மற்றும் பிரகாஷ் ஆகியோர் இருந்ததாக நதியா தனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். இரண்டாவது எதிரி ஸ்பேனரால் வாயில் ஐயப்பனை அடித்து வாயில் பற்கள் எல்லாம் கொட்டி விட்டதாக நதியா தனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஐயப்பனை விநாயகர் கோயில் டேங்க் அருகே அழைத்துச் சென்று ஜட்டியுடன் நிற்க வைத்து தண்ணீர் ஊற்றி 1 முதல் 4 எதிரிகள் அடித்ததாக நதியா தனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் நதியா தனது வாக்குமூலத்தில் ஐயப்பனை ஜட்டியுடன் நிற்க வைத்து அவரை 1ம் எதிரி பந்தை காலால் எட்டி உதைப்பது போல எட்டி உதைத்ததாக சொல்லவில்லை என்றால், பந்தை காலால் எட்டி உதைத்தது போல் உதைத்ததாக குறிப்பிடவில்லை. சிகிச்சையிலிருந்த ஐயப்பனை நதியா விசாரித்தபோது அவர் திருக்கனூர் ஏரிக்கரையில் பயந்து தங்கி இருந்தபோது 1,2 எதிரிகள் அவரை அழைத்து சென்றதாக தன்னிடம் சொன்னதாக சொல்லவில்லை என்றால் சரிதான். 26-04-2021 தேதியில் அ.சா.1 நதியா சம்பவம் குறித்து ஒரு புகார் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால், காவல்

நிலையத்தில் அவர் கணவர் இறந்த பிறகு புகார் கொடுக்கவில்லை. மருத்துவமனையில் இருந்து இறப்பிற்கான தகவல் வந்தது. அதே தகவலை அவர் காவல் நிலையம் வந்து தெரிவித்ததால், ஏற்கனவே தகவல் பெறப்பட்டதை கூறி அவரை அனுப்பி வைத்தோம். இந்த விவரங்களை நதியாவின் வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால், குறிப்பிடவில்லை. 1வது எதிரி அஞ்சலாட்சி வீட்டிற்கு வெளியே ரோட்டிற்கு பக்கத்தில் டிராக்டர் நிறுத்தும் இடத்தில் இருந்து கட்டில் காலை எடுத்தார் என்று நதியா எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால், சொல்லவில்லை. 3,4 எதிரிகள் தள்ளிவிட்டு நதியா சிமெண்ட் தரையில் விழுந்ததாக எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால், கீழே விழுந்ததாக சொல்லியுள்ளார். சிமெண்ட் தரையில் விழுந்ததாக சொல்லவில்லை. 25-04-2021 தேதியில் 4 அல்லது 4 1/2 மணியளவில் எங்களது காவலர் ஒருவர் சிவபெருமான் பாளையத்திற்கு சென்று ஐயப்பனை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக நதியா தனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. 25-04-2021 மற்றும் 26-04-2021 ஆகிய தேதிகளிட்ட வாக்குமூலங்களில் நதியா பிள்ளையார் கோயில் வாட்டர் டேங்க் அருகில் நான்கு எதிரிகளும் சேர்ந்து தாக்கும் போது, நதியா பட்டியல் சாட்சி 2, 3 ஆகியோர்களுடன் அங்கு ஓடியதாக சொல்லவில்லை என்றால், பிள்ளையார் கோயில் வாட்டர் டேங்க் அருகில் அழைத்து சென்று மீண்டும் நான்கு எதிரிகளும் சேர்ந்து தாக்கியதாகவும், அவர்களது உறவினர்களான கோபாலகிருஷ்ணன், மற்றும் பிரகாஷ், ஆகியோருடன் ஓடி சென்றபோது எதிரிகள் அனைவரும் மிரட்டி விட்டு ஆயுதங்களுடன் சென்று விட்டதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். நதியாவின் இரண்டாவது வாக்குமூலத்தில் பட்டியல் சாட்சி 2,3 ஐயப்பனை சேர்ந்து தூக்கியதாக சொல்லவில்லை என்றால், அவ்வாறு குறிப்பிடவில்லை. 22-04-2021 தேதியில் நதியா சிவபெருமான் பாளையம் வந்ததற்கு பிறகு ஐயப்பன் வெளியில் கிளம்பி போனார் என்று நதியாவின் வாக்குமூலத்திலேயே இல்லை என்று சொன்னால் சரிதான். 12 முதல் 1 மணி வரை முனியம்மாள் வீட்டின் அருகில் சண்டை நடந்ததாகவும் அப்போது பட்டியல் சாட்சிகள் கோபாலகிருஷ்ணன் மற்றும் பிரகாஷ் ஆகியோர் அங்கு இருந்ததாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் கோபாலகிருஷ்ணன் மற்றும் பிரகாஷ் ஆகியோர் 3:30 மணிக்கு சண்டையை விலக்கி விட்டனர் என்று நதியா தனது வாக்குமூலத்தில் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி இளையராஜா போன் செய்து ஆம்புலன்சை வரவழைத்ததாக நதியா தனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் குறிப்பிடவில்லை.

(கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்தி வைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.)